# வந்தாலும் வந்தோம்

'காமர் கயல் புரளக் காவி முகை நெகிழத்

தாமரையின் செந்தேன் தளையவிழப் –
பூமடந்தை

தன்னாட்டம் போலும் தகைமைத்தே
சாகரஞ் சூழ

நன் நாட்டின் முன் நாட்டு நாடு'

புகழேந்தி தன் நளவெண்பாவில் நிடத நாட்டைப்பற்றிப் பாடும் முதல் வெண்பா இது. அழகிய கயல்மீன்கள் புரள்வதால் சிலிர்த்த கருங்குவளை மலர்கள் முகைநெகிழ்ந்து மலர பூமித்தாய் ஆட்சிசெலுத்தும் நிடதம் நாடுகட்கெல்லாம் தலையாயது என்பது அதன் பொருள்.

இது வசந்தகாலம். பூமிப்பந்தின் வடவரைக் கோளத்தில் கிட்டத்தட்ட பூமத்திய ரேகைக்கு வடக்கே முறையே பாகைகள் ஏழுக்கும் பத்துக்கும் இடையே இருப்பதால் இலங்கைக்கும், அதே வேளை வடக்கே பாகைகள் ஐம்பதிற்கும் அறுபதிற்கும் இடையே இருப்பதால் இங்கிலாந்திற்கும் பருவகாலங்களில் பெரியவேறுபாடுகளில்லை. இப்போது அங்கும் இங்கும் வசந்தமே. எனது அன்னை பூமியின் மாரிகால, வசந்தகால நினைவுகள் என் நெஞ்சில் நிழலாடுகின்றன.

மட்டக்களப்பில் மாரிகால இரவில் தவளைகளும், மோக்கான்களும் காச்சு மூச்சென்று கத்திக்கொண்டேயிருக்கும். அந்தச் சத்தங்களைக் காட்டிப்பயமுறுத்தியேசாப்பிட மறுத்து அடம் பிடிக்கும் குழந்தைகளுக்குத் தாய் மார் ஊட்டிவிடுவார்கள். நானும் அப்படிப் பயந்து பயந்து என் அன்னை தந்த அன்புக் கவளங்களை வேண்டாவெறுப்போடு விழுங்கியிருக்கிறேன். இன்று அந்தத் தவளைச் சந்தங்கள் அந்தப் பூமியில் கேட்பதில்லை. இடையறாது விழுந்து வெடித்த ஆட்டிலறிக் குண்டுகளாலும், துவக்கு வெடிகளாலும் ஏற்பட்ட போரோசை மெல்லிய அந்த ஜீவன்களை முற்றாகவே இனக்கொலை செய்துவிட்டது. சிங்களம் எம்மை அழிக்கப் புகுந்து இப்போது தவளையினங்களை அழித்துவிட்டு வெற்றிப் பெருமிதத்தில் நிற்கிறது.

போதாதற்கு விவசாய நிலங்களில் அளவுக்கு மீறிய கிருமிநாசினிகளின்

## அலசுவாரம்

அலசுபவர்: மட்டைக்கிளப்பான்

பாகம் 44

பாவனையால் குளங் குட்டைகளும் சுற்றாடலும் மாசடைந்து அந்த ஜீவன்கள் தாங்கமுடியாத் தகைப்பில் அற்றுப் போய்விட்டன. ஒரு பிரதேசத்தின் சுற்றுச் சூழல் சீர் கெடும்போது முதலாவது பாதிக்கப்படுவது இத்தகைய மென்மையான ஜீவன்கள்தான்.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் மாரியில் தேங்கிய நீர் வசந்தத்தில் குளம் குட்டைகளிலெல்லாம் நிறைந்து நிற்கும். வெற்றிலைத் தோட்டங்களுக்கும் பயிர்களுக்கும் தோள் சுமந்து நீர்வார்ப்பதற்காகத் தோண்டிய துரவுகளிலெல்லாம் மீன்கள் துள்ளிப்பாயும். மயிலிறகு போன்று மலர்ந்து நிற்கும் கருங்குவளைமலர்கள் குளமெங்கும் நிறைந்து சிரிக்கும். ஆம்பலும் அரவிந்தமும் அழகு காட்டி மயக்கும். குடைக்காம்பு போன்று கொட்டிப் பூக்கள் குத்திட்டு நிற்கும். இவற்றை நினைக்கும் போதுதான் அந்த நளவெண்பாப் பாடலும் நினைவுக்கு வருகிறது. புகழேந்தி சொன்னது அத்தனையும் என் மண்ணுக்குப் பொருந்துகிறது. ஆனால்!

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல் கோடை வந்ததும் ஓடிவிட்டேன். ஆம்!

'கார்மேகம் சூழக் களனியெலாம் பொன்
விளைந்த

பார்மீதுயர்ந்த பசுந்தரையைத் தாய்நிலத்தைப்

போர் மேகஞ் சூழந்ததனால் புறங்காட்டி
வந்து விட்டேன்.'

அந்த அற்பத்தனம் நெஞ்சைக் குடைகிறது.

அங்கே என் சுற்றமும் சொந்தங்களும் கொட்டியாய் ஆம்பராய் தாமரையாய்க் காவியாய் அந்த மண்ணோடு மண்ணாய்ச் சேற்றோடு சேறாய் ஒன்றி, மீண்டுமோர் புதுவசந்தத்தை எதிர்பார்த்து ஏங்கிக் காய்கின்றன. எப்போது அந்த வசந்தம் வரும்? நான் இங்கே வந்து நின்றுகொண்டு

'அன்னைமண் தந்திடு கூழதுவாயினும்
அருமையை மறவாரேல்

அன்னியன் பிச்சையில் அமிழ்தமருந்தினும்

அகமகிழ்ந்திடுவாரோ ?'

என்று அங்கலாய்ப்பதில் என்ன பலன்?

'மேற்குலகந்தனிலே – பொருள்

மேவிய வாழ்வொடு வாழினும் எங்களின்

நாட்டை மறப்போமோ – எந்த

நாளினிப் போயதில் வாழ்வதென்றே –
அன்னை

வீட்டை மறப்போமோ – என்று

விம்மியழுது புலம்பிடும் எம் குரல்

கேட்டிருப்பாய் காற்றே – எங்கள்

கேவலைக் கீழத்திசை சென்றெமதீழத்தில்

மீட்டுமுரையாயோ!

ஆற்றல் இழந்தவராய் – எங்கள்

அன்னை மொழியை மறந்தவராய்ப் –
பெருங்

காற்றிற் கலந்தவராய் – கலாச்சாரம்

கலைகள் அழிந்தவராய் – நாம்

மாற்றினமாகுவதோ – இல்லை

மண்ணினை மீட்டு நாம் சென்றங்கு
வாழ்வதோ

சாற்றிடுவாய் தாயே ஹே! சாமுண்டி காளீ
வீரகராளி ?'

என்று காற்றையும் கனகதுர்க்கையையும் வேண்டுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

நாமெல்லோருமே போரை எதிர்கொள்ள முடியாமற்தான் புலம்பெயர்ந்தோம். யாரும் இங்கு வந்தால் உல்லாச வாழ்வு வாழலாமென்று வரவில்லை. இதுதான் உண்மை.

நானும் 1985 இல் இந்த நாட்டுக்கு வந்து மனம் கேட்காமல் உடனே திரும்பிச் சென்றேன். ஆனால் ஒன்பது வருடங்கள் போர்ச் சூழலில் வாழ்ந்த பிறகு கிடைத்தவோர் வாய்ப்பைப் பயன்படுத்தி மீண்டும் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டேன். பின்னர் குடும்பத்தையும் அழைத்துக்கொண்டேன்.

அங்கிருந்தபோது எமது தேசிய விடுதலைப்போராட்டத்தில் எமக்குரிய பங்கை எம்மிற் பலரால் ஆர்வமிருந்தும் செய்யமுடியாமற் போயிருக்கலாம். ஆனால் இங்கு அதற்குரிய வசதியும் வாய்ப்பும் நிறையவேயுள்ளன.

அண்மையில் கவிஞர் புதுவை இரத்தினதுரையவர்கள் ஒரு பேட்டியின்போது மிகவும் நம்பிக்கையான தொனியில் எமது வேலை இங்கே நாற்பது வீதம் தானுள்ளது, மிகுதி அறுபது வீதமும் புலம்பெயர்ந்த உறவுகளின் கையிலேயேயுள்ளது என்று கூறினார்.

ஆகவந்தாலும்வந்தோம், எமதுதேசியத்தின் விடிவுக்காக அந்த அறுபது வீதத்தையும் குறையிலாது நிறைவு செய்வோம். நிச்சயம் எமது மண் விடுதலை அடைந்தே தீரும்.

*தொடருவம்.*





**உயர்திரு தேவசிகாமணி தில்லையம்பலம்.**

மலர்வு
25.05.1938

உதிர்வு
30.01.2008

# 31ம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும் (அந்தியேட்டி)

ஆலமரமாய் நிமிர்ந்து நின்று
எமக்கு அன்பு என்னும் நிழல் தந்து
பாரினில் தலை நிமிர்ந்து நின்று
பாசத்தோடு அரவணைத்துக் காத்து நின்ற
எமது அன்பு அப்பாவே!
உங்கள் நினைவுத் துடிப்புக்கள்
என்றென்றும் எங்கள் மனதினிலே
பிறப்பிலும் இறப்பை எழுதும் இறைவன்
பிரிவின்போது துயரம் மறந்திட
வழியொன்றும் தரவில்லையே
இறுதிவரை எம்மோடு
இணைந்திருப்பீர் எனறு நினைத்தோம்
இடை நடுவே எம்மையெல்லாம் தவிக்க விட்டு
எங்கே அப்பா சென்று விட்டீர்கள்?
உங்கள் அன்புக்கும் ஆசிக்கும்
என்றும் காத்திருக்கும்

உங்கள்

**- மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

30.01.2008

அன்று சிவபதமடைந்த எங்கள்
அப்பாவின் இறுதிக் கிரியைகளில்
கலந்து கொண்டு பல வழிகளிலும்
உதவிகள் நல்கி ஆறுதல்
அளித்த அனைவருக்கும் எங்கள்
நன்றியினைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

மனைவி.
மக்கள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.
குடும்பத்தினர்.